பக்கங்கள் ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.50

சுடர்: 6 பிரசோற்பத்தி ஆடு வைகாசி 03 மீ வெள்ளிக்கிழமை [17—05—1991] UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 164

# கொழும்பில் உள்ள அகதிகள் மட்டக்களப்பு, வவுனியாவுக்கு!

## விசேட முகாம்கள் அமைத்து மாற்றுவதற்கு புனர்வாழ்வு அமைச்சு வெகு மும்முரம்

கொழும்பு, மே 17

கொழும்பில் உள்ள அகதி முகாம்களில் தங்கியுள்ள ஆயிரக் கணக்கான தமிழர்களை, மட்டக்களப்பு, வவுனியா ஆகிய இடங்களுக்கு இடம் மாற்றுவதற்கு அரசு திட்டமிட்டுள்ளது.

இவ் விடயத்தில் புனர்வாழ்வு அமைச்சும், பாதுகாப்பு அமைச்சும் வெகு முனைப்பாகச் செயற்பட்டு வருகின்றன.

தமிழ் அகதிகளைக் கொழும் பிலிருந்து மட்டக்களப்புக்கும், வவுனியாவுக்கும் மாற்றுவது சம்பந்தமாக அத்தியாவசிய சேவைகள் நாயகத்தினால் அடுத்தடுத்து நடத்தப்பட்ட ஆறு கூட்டங்களில் ஆராயப் பட்டுள்ளது.

வெள்ளவத்தை மாணிக்கப் பிள்ளையார் ஆலயத்திலும் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்திலும் ஆயிரக்கணக்கானவர்கள் அகதிகளாகத் தங்கியுள்ளனர்.

மட்டக்களப்பு, யாழ்ப்பாணப் பகுதிகளைச் சேர்ந்தவர்களே அங்கு அகதிகளா

[6 ஆம் பக்கம் பார்க்க]

## முல்லைத்தீவுப் பகுதியில் தமிழ் ஊர்காவலர்கள் படையினர் மீது பதில் தாக்கு!

யாழ்ப்பாணம், மே 17

கடந்த புதனன்று முல்லைத் தீவு மாவட்டம் தனிக்கல்லு முகாமிலிருந்து பட்டிக்குடியிருப்புப் பகுதியை நோக்கி முன்னேறி வந்த படையினர் வயலில் வேலை செய்து கொண்டிருந்த பொதுமக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

பொதுமக்கள் தப்பி ஓட அப்பகுதியிலிருந்த தமிழ் ஊர்காவலர்கள் படையினர் மீது திருப்பித் தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதலை அடுத்து இராணுவத்தினர் பின்வாங்கினர் என்று தெரிவிக்கப்பட்டது. [உ]

## மடு அகதிகள் முகாமுக்கு 10 லொறிகளில் உணவு

### நேற்றுப் போய்ச் சேர்ந்தது

யாழ்ப்பாணம், மே 17

மடு அகதி முகாமுக்கு நேற்று 10 லொறிகளில் உணவுப் பொருள்கள் கொண்டு போய்ச் சேர்க்கப்பட்டன.

கடந்த மாதம் 27 ஆம் திகதி தாண்டிக்குளத்தில் வைத்து மடு அகதி முகாமுக்கு உணவு கொண்டு சென்ற ஐ.நா. அகதிகள் விதானிசராலய லொறிகள் மீது இராணுவம் சோதனை கொண்ட தாக்குதலையடுத்து உணவு விநியோகம் இடை நிறுத்தப்பட்டிருந்தது.

ஐ.நா. அகதிகள் ஸ்தானிகராலய அதிகாரிகள் இலங்கை அரச அதிகாரிகளுடன் நடத்தி வரும் பேச்சுக்கள் முடிவுறாத நிலையில்—

அகதிகளுக்கான உணவுப் பொருள்கள் தீர்ந்துவிட்டதால், அவசரமாக அவற்றை எடுத்துச் செல்ல முடிவாகியதாகத் தெரிவிக்கப்பட்டது.

வழமையை விட விசேட ஏற்பாடுகளுடன் நேற்றுக் காலை அனுராதபுரத்திலிருந்து வாகன அணி, புறப்பட்டது. முன்னாலும், பின்னாலும் "வயர்லஸ்" பொருத்தப்பட்ட "பிக்கப்" வாகனங்கள் சென்றன. [ஓ-3]

## இலங்கை - போராளிகள் - இந்தியா முத்தரப்பு ஒப்பந்தம் வேண்டும்

### முன்னாள் அமைச்சர் சிதம்பரம் கருத்து

சென்னை, மே 17

இலங்கைத் தமிழர் பிரச்சினையை தீர்க்கும் பொருட்டு புதிய ஒப்பந்தம் ஒன்று ஏற்பட்டால், அது முத்தரப்பு ஒப்பந்தமாக இருக்க வேண்டும்.

இலங்கை அரசு - தமிழ்ப் போராளிகள் குழுக்கள் - இந்திய அரசு ஆகிய மூன்று தரப்பாரும் அதில் கைச்சாத்திட வேண்டும்; சம்பந்தப்பட வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் இந்திய மத்திய அரசின் முன்னாள் அமைச்சர் திரு ப. சிதம்பரம்.

அவர் வெரித்தஸ் வானொலிக்கு அளித்த பேட்டியின் போதே மேற்கண்டவாறு சொன்னார்.

பேட்டியின் முக்கிய பகுதிகள் வருமாறு:-

இலங்கை அரசுக்கும் போராளிக் குழுக்களுக்கும் இடையே ஒப்பந்தம் ஏற்படும்பட்சத்தில் இந்தியா அதற்கு நல்லுத

[6 ஆம் பக்கம் பார்க்க]

## பேச்சுக்கான புதிய முயற்சிகள் எதுவும் இடம்பெறவில்லையாம்!

### ஜனாதிபதியின் ஆலோசகர் பிரட்மன் கூறுகிறார்

கொழும்பு, மே 17

விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க இலங்கை அரசு புதிய முயற்சிகளை எடுத்து வருவதாக சில கொழும்புப் பத்திரிகைகள் வெளியிட்ட செய்திகள் தவறானவை.

இவ்வாறு ஜனாதிபதியின் வெளிவிவகார ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் தெரிவித்தார் என்று வெரித்தாஸ் வானொலி நேற்று அறிவித்தது.

தமிழர் பிரச்சினைகளைத் தீர்ப்பது குறித்தோ, விடுதலைப் புலிகளுடனான உறவு குறித்தோ அரசு புதிய கொள்கை எதனையும் கையாளவில்லை என்றும் அவர் மேலும் சொன்னார்.

விடுதலைப் புலிகள், அரசுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்றால் அதற்கு முன்னர் —

வன்முறையை ஒரு, வழிமுறையாகக் கையாள்வதைக் கைவிடுவதாக தமிழர்களின் நலனைக் கருத்திற் கொண்டு விடுதலைப் புலிகள் அறிவிக்க வேண்டும் என்றும்—

திரு. வீரக்கோன் மீண்டும் வலியுறுத்தினார் என்றும் வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது. [உ-எ]

## கட்டுவனில் மோதல்

யாழ்ப்பாணம், மே 17

கட்டுவன் இராணுவத்தினர் நேற்று நண்பகல் 12.10 மணியளவில் வெளியேறி முன்னேற முற்பட்டனர்.

அப்போது விடுதலைப் புலிகள் கடும் தாக்குதல் நடத்தி, அவர்களை பின்வாங்கச் செய்தனர்.

சேத விவரங்கள் குறித்து தெரியவரவில்லை. [ஓ]

## முச்சந்தி முரளி



இரு தரப்பு ஒப்பந்தத்தை தூக்கிப் பிடிச்சவர், இப்போ முத்தரப்பு பற்றி பேசுகிறார்......!

## உணவுப் பொருள்களுடன் நேற்றும் லொறிகள் வந்தன

யாழ்ப்பாணம், மே 17

வவுனியா ஊடான போக்குவரத்து சீரானதைத் தொடர்ந்து நேற்று அதிகாலை முதல் மாலை வரை பல லொறிகள் வடக்கே வந்து சேர்ந்தன.

உணவுப்பொருள்கள் மற்றும் தேங்காய் எண்ணெய் போன்றவற்றை ஏற்றிக் கொண்டு லொறிகள் வந்துள்ளன.

மேலும் பல லொறிகள் உணவுப் பொருள்களுடன் வடக்கே வருவதற்கு இராணுவத்தின் அனுமதி பெற வவுனியாவில் காத்து நிற்பதாகவும் அறியவந்தது. [ஓ-5]

## ஸ்ரீலங்கா படைகளை முறியடிக்க புலிகளின் விசேட கெரில்லா அணி!

### சீனச் செய்தி நிறுவனம் வெளியிட்ட தகவல்

பீஜிங், மே 17

ஸ்ரீலங்கா அரசப் படையினரை முறியடிக்க கெரில்லாப் போர் முறையில் சிறப்புப் பயிற்சி பெற்றவர்களைக் கொண்ட தனிப் படைப் பிரிவு ஒன்றை விடுதலைப் புலிகள் அமைத்திருப்பதாக சீனச் செய்தி ஸ்தாபனமான (Xhinua) ஷின்னுவா தெரிவித்துள்ளது.

இப்படையில் 200 முதல் 300 வரையான விடுதலைப் புலிகள் உள்ளனர் என்றும் அச்செய்தி ஸ்தாபனம் கூறியுள்ளது.

இத் தனிப்படை அதிரடி தாக்குதல்களை மின்னல் வேகத்தில் நடத்திவிட்டு, தலைமறைவாகுவதில் வல்லவர்கள் என்று ஸ்ரீலங்கா இராணுவ அதிகாரிகள் ஒப்புக்கொண்டுள்ளனர் என்றும் 'ஷின்னுவா' செய்தி நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளின் இந்தத் தனிப்படை தான் அண்மையில் மன்னார் நானாட்டான் பகுதிகளில் இரண்டு இராணுவ அணிகளை நிர்மூலமாக்கியது என்பதை ஸ்ரீலங்கா இராணுவ அதிகாரிகள் கூறினர் என்றும் அச் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. [உ-எ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் கோயில்

**தீர்த்த உற்சவம்**

இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் கோயில் தீர்த்த உற்சவம் நாளை சனிக்கிழமை [18-5-1991] பிற்பகல் 4 மணியளவில் நடைபெறும்.

[16725] தீர்த்த உபயகாரர்



# G. C. E. A/L (1993)

**St. Patrick's College**

எமது கல்லூரியில் மேற்படி வகுப்புகள் ஆரம்பமாகி விட்டன. இதில் சேர விரும்பும் ஏனைய மாணவர்கள் எம் காரியாலயத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று

**21 - 05 - 91 க்கு முன் சமர்ப்பிக்கவும்.**

பிரவேசப் பரீட்சை

**(தமிழ், கணிதம், விஞ்ஞானம், சமூகக்கல்வி)**

**24 - 05 - 1991 காலை 8 30 மணிக்கு நடைபெறும்.**

[சி/5064] —அதிபர்



**யாழ்ப்பாணம்**

**பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்**

**(வரையறுக்கப்பட்டது)**

# பதவி வெற்றிடம்

1. பதவி: **செயலாளர் - 114/08**

**சம்பளத்திட்டம்:**

1005 — 40x5 — 50X 0 — 1705

**பிணைப்பணம்:**

ரொக்கப் பிணை ரூபா 5000/-

**கல்வித் தகைமைகள்:**

[அ] கூட்டுறவுப் பணியாளர் 9 ஆவது சம்பளத் திட்டத்தில் அலுவலக உதவியாளர் / அங்கத்துவ உறவு பயிற்சி உத்தியோகத்தர் பதவியில் 3 வருடங்களுக்குக் குறையாத அனுபவம், அல்லது கூட்டுறவுப் பணியாளர் 10 ஆவது சம்பளத் திட்டத்தில் மேற்காண் பதவியில் 06 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

[ஆ] அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டத்துடன் அல்லது அதற்கு இணையான தகைமைகள்.

அல்லது

[இ] பட்டயம் பெற்ற செயலாளர்கள், நிர்வாகஸ்தர்கள் நிறுவனத்தின் இடைநிலைப் பரீட்சையிலான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / தொழில்நுட்ப ஸ்தாபனமொன்றில் செயலாளர் பதவியில் 2 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

[ஈ] கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரம் (உயர்தரம்) / க. பொ. த. (உயர்தரம்) இல் 3 பாடங்களிலான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / தொழில் ஸ்தாபனமொன்றின் செயலாளர் பதவியில் 4 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

**வயது எல்லை: 25 — 45 வரை**

[சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது]

கூட்டுறவுப் பணியாளர் ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்ட மேலதிகப் படிகளும் சேர்த்து வழங்கப்படும்.

விண்ணப்பப் படிவங்களை சங்க தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

சங்க எல்லைப் பரப்பிற்குள் வசிப்பவர்களின் விண்ணப்பங்கள் கூடிய கவனத்திற்கு எடுக்கப்படும்.

**விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:**

பொது முகாமையாளர்,

**யாழ். ப. நோ. கூ., சங்கம்,**

2?1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**விண்ணப்ப முடிவுத் திகதி: 31 - 05 - 1991**

- பதில் பொதுமுகாமையாளர்.

15-05-1991 [சி-5065]


## பூஸா தடுப்பு முகாமிலுள்ள

# ஜே. வி. பி. சந்தேக நபரை விடுதலை செய்ய உத்தரவு

கொழும்பு, மே 17

பூஸா இராணுவத் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஜே. வி. பி. தீவிரவாத சந்தேக நபரான யு. ஜி. போதிதாஸ என்பவரை விடுதலை செய்யும் படி உயர் நீதிமன்றம் கடந்த வாரம் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளருக்கு உத்தரவிட்டது.

அவரைத் தடுப்பு முகாமில் வைத்துள்ளது அவரின் அடிப்படை உரிமைகளை மீறும் செயலாகும் என்றும் தீர்ப்பளித்த உயர்நீதி மன்றம், தடுத்து வைக்கப்பட்டுள்ள நபருக்கு அடிப்படை மனித உரிமை மீறலால் ஏற்பட்ட கஷ்டங்களுக்கான நஷ்டஈடாக 10 ஆயிரம் ரூபா வழங்கும்படியும் அரசுக்கு உத்தரவிட்டது.

அந்த நஷ்டஈட்டில் 3,000 ரூபா சட்டவிரோதமாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த குற்றம்—

7,000 ரூபா அந்த நபரை தரக்குறைவாக நடத்தியதற்காகவும் வழங்கப்படுவதாகவும் உயர்நீதிமன்றம் தெரிவித்திருக்கிறது. [ஒ-எ]

## சங்கானை சங்கக் கடையில் திருட்டு

யாழ்ப்பாணம், மே 17

சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க 33 ஆம் இலக்க [தொட்டிலடி] கிளை கடந்த திங்கட்கிழமை இரவு திருடர்களால் உடைக்கப்பட்டு, பொருள்கள் அபகரிக்கப்பட்டன.

மல்லி, பெருஞ்சீரகம், சீரகம் போன்றவையே திருடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. [ஒ-15]

# இயக்கச்சிப் பகுதியில் இரவில் விமானக் குண்டு வீச்சு!

தென்மராட்சி, மே 17

நேற்று முன்தினம் இரவு 10. 30 மணியளவில் இரு பொம்மர்கள் ஆனையிறவு, தட்டுவன்கொட்டி இயக்கச்சிப் பகுதிகளில் குண்டு வீச்சுக்களை நடத்தின.

இதேவேளை —

ஆனையிறவு இராணுவத்தினர் நேற்றுக் காலை 7 மணியளவிலும், 10 மணியளவிலும் ஷெல் தாக்குதல்களை நடத்தினர்.

இயக்கச்சி, தட்டுவன் கொட்டி, கோவில்வயல் பகுதிகளில் ஷெல்கள் விழுந்து வெடித்தன. [ஒ-117-15]

## அரச அதிபர் பதவியேற்பு

யாழ் மாவட்ட அரச அதிபராக இடமாற்றப்பட்டுள்ள திரு. கே. மாணிக்கவாசகர் நேற்று உத்தியோக பூர்வமாகத் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

நேற்றுக்காலை யாழ். செயலகத்துக்கு வருகைதந்த புதிய அரச அதிபரை செயலக ஊழியர்கள் அன்புடன் வரவேற்றனர்.

அதனை அடுத்து திணைக்களத் தலைவர்கள் மற்றும் அதிகாரிகள், உதவி அரசாங்க அதிபர்கள் அரச அதிபரைச் சந்தித்து உரையாடினர். [ஒ-5]

## இன்று

நல்லூர்க் கொத்தணிப் பிரிவு அதன் கீழ்வரும் பாடசாலைகளுக்கு கற்பித்தல் உபகரணங்களை இன்று வழங்குகிறது.

இந்த கட்புல சாதனம் வழங்கும் வைபவம் இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ். சுண்டுக்குழி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறும். [ஒ-த]

## நேபாளத்தின் புதிய பிரதமர்

காத்மண்டு, மே 17

நேபாளத்தின் புதிய பிரதமராக திரு. ஜே. பி. கொய்ராளா பதவி ஏற்கலாம் என்று அறிவிக்கப்படுகிறது.

நடந்து முடிந்த தேர்தலில் பெரும்பான்மை ஆசனங்களைப் பெற்று வரும் நேபாள காங்கிரஸின் சார்பில் திரு. கொய்ராளா பிரதமராக பதவி ஏற்பதற்கு, தோல்வியுற்ற பிரதமர் கிருஷ்ணபிரசாத் பத்தராய் இணக்கம் தெரிவித்துள்ளார். [ஒ-ஏ]

## டயஸ் கந்தசாமி வெற்றிக்கிண்ணம்

யாழ்ப்பாணம், மே 17

ஈச்சமோட்டை சனசமூக நிலையத்தின் 10 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி ரோஜர் டயஸ் கந்தசாமி நினைவாக நடத்தப்பட்ட 7 பேர் கொண்ட, 12 ஓவர் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதி போட்டியில் நல்லூர் நொதேன் விளையாட்டுக் கழக பச்சை அணி வெற்றி பெற்றது. [இ]

## பொருட்காட்சி

வசாவிளான் கைப்பணி அலங்காரப் பொருள்களின் கண்காட்சியும், விற்பனையும் நாளை 18 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 00 மணி தொடக்கம் மாலை 5-00 மணிவரை தெய்யாத்தோட்டம் சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறும்.

மகளிர் அபிவிருத்தி நிலைய [illegible] இவர்கள் [illegible] கிராம [illegible] தினராகக் கலந்து கண்காட்சியைத் திறந்துவைப்பார்.


# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| | |
|---|---|
| **தோற்றம்:** | **மறைவு:** |
| 27 | 17 |
| — | — |
| 11 | 05 |
| — | — |
| 1924 | 1989 |

அமரர்

## அம்பலவாணர் கணபதிப்பிள்ளை

(ஓய்வு பெற்ற சுகாதாரத் திணைக்கள உத்தியோகத்தர்)

நெஞ்சினில் நிழலாடும் நினைவுகளுடன் வாழும்

-குடும்பத்தினர்

இணுவில் மேற்கு,
இணுவில்.

[சி 0001]



# மரண அறிவித்தல்கள்

## திருமதி பாலசுப்பிரமணியம் சரோஜினி (ரஞ்சி)

கொட்டடியைப் பிறப்பிடமாகக் கொண்ட சரோஜினி 15—5—91 இல் அகால மரணமானார். இவர் பாலசுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், கிருஸ்ணராசா — லீலாவதியின் அன்பு மகளும், நல்லசிவம், பகவதியின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற மனோகரன், கிருஸ்ணகுமார் [ரஞ்சன்], காலஞ்சென்ற பத்மநாதன் [ரவி] ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார். அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று 17—5—91 வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வில்லூண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்

இல: 31,
சீனிவாசகம் வீதி,
கொட்டடி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
ராதா கிருஸ்ணன்

[16838]

## வேலுப்பிள்ளை தம்பிப்பிள்ளை

நாயன்மார் வீதி நல்லூரைச் சேர்ந்த வேலுப்பிள்ளை தம்பிப்பிள்ளை காலமாகிவிட்டார்.

இவர் இரத்தினம் அம்மாளின் அன்புக் கணவரும் கௌரியின் தந்தையும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை செல்லையா, வைத்திலிங்கம், தங்கம்மா, நாகலிங்கம் ஆகியோரது சகோதரரும், சிவரெத்தினம், ராசம்மா, தவமணி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று [17-5-91] 25, செம்மணி வீதியில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பி. ப. 2 மணியளவில் செம்மணி மைதானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இரத்தினம்

[16724]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிவாரண விண்ணப்பங்கள் திரும்பி வருகின்றன

யாழ்ப்பாணம், மே 17

வன்செயலினால் வீடும், வீட்டு உடைமைகளும் பாதிக்கப்பட்டு நிவாரணம் பெறுவதற்காக அனுப்பப்பட்ட அரச ஊழியரின் விண்ணப்பங்கள் பல மாகாணசபையினால் திருப்பி அனுப்பப்படுகின்றன.

விண்ணப்பத்தில் 2 ரூபா முத்திரை ஒட்டி சமாதான நீதிவான் முன்னிலையில் ஒப்பமிடப்படாதது, விண்ணப்பதாரருக்கு வழங்கப்பட வேண்டிய நிவாரணத் தொகையை உதவி அரசாங்க அதிபருக்குப் பதிலாக பதில் கடமை ஆற்றியவர் உறுதிப்படுத்தியது, சேதமடைந்த விவரங்களை சமாதான நீதிவான் முன்னிலையில் உறுதிப்படுத்தாதது, நிவாரணத்துக்கான கோரிக்கைப்படிவம் சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவரினால் உறுதிப்படுத்தப்படாதது போன்ற காரணங்களுக்காகவே அவை திருப்பி அனுப்பப்படுகின்றன என்று கூறப்படுகிறது. [இ 126]

## தமிழ் தட்டச்சு - சுருக்கெழுத்து துறைகளில் பயிற்சி பெறவாய்ப்பு

கொழும்பு, மே 17

தமிழ் தட்டச்சு - சுருக்கெழுத்துப் பயிற்சிக்கு, இளைஞர் விவகார அமைச்சின் கீழ் செயற்படும் தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

ஓராண்டு காலப் பயிற்சி இரண்டு பிரிவுகளாக வழங்கப்படும்.

முதல் ஏழு மாதங்கள் சுருக்கெழுத்து, தட்டச்சு துறைகளில் தீவிர பயிற்சி வழங்கப்படும். எஞ்சிய ஐந்து மாதங்கள் அதிகாரசபை ஒழுங்கு செய்யும் அலுவலகம் ஒன்றில் தொழிற் பயிற்சியாக வழங்கப்படும்.

விண்ணப்ப முடிவு திகதி இம்மாதம் 24ஆம் திகதி என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பயிலுநர் காலத்தில் மாதம் 450 ரூபா அலவன்ஸும் சலுகை அடிப்படையில் பஸ் சீசன் டிக்கெட்டும் வழங்கப்படும்.

24-5-91 அன்று 16—25 வயதுக்கு உட்பட்டவர்களே விண்ணப்பிக்க முடியும். [இ-]

## 2,000 ஆண்டு சனத்தொகை 1 கோடி 90 லட்சம்

கொழும்பு, மே 17

2000 ஆவது ஆண்டில் இலங்கையின் சனத்தொகை ஒரு கோடி 90 லட்சமாக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போதைய சனத்தொகை ஒரு கோடி 71 லட்சம் என்பது குறிப்பிடத்தக்கது. [இ-எ]


## உடன் தேவை

புதிதாக அல்லது சிறிது காலம் பாவித்த அல்கதீன் பைப் உடன் தேவை

வைத்திருப்பவர்கள் பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகிறார்கள்.

ஷப்றா,
207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்



## கலை, வர்த்தகக் கல்லூரி
## C. C. A.
(வெலிங்டன் சந்திக்கு அருகாமை)

## A/L 93

1. பொருளியல் ... உதயன்
2. கணக்கியல் ... ஸ்ரீ
3. வர்த்தகம் ... இ. இரட்ணம்
4. அளவையியல் ... சயந்தன்
5. தமிழ் ... மீரா
6. இந்து நாகரிகம் ... ஜோதீஸ்வரன்
7. அரசியல் ... சீலன்
8. புவியியல் ... வேலாயுதபிள்ளை

ஆரம்பம்: காலை 8-00 மணி
சனி 18-05-1991

## A/L 91
முழுப்பாடத்திட்ட வினா - விடை வகுப்பு

| | |
|---|---|
| தமிழ் - மீரா | 12 — 1 |
| இந்துநாகரிகம் | 1 — 2 |
| பொருளியல் | 2 — 3 |
| கணக்கியல் | 3 — 4 |
| வர்த்தகம் | 12 — 1 |

## A/L 92
ஆரம்பம் சனி 18-05-1991
8.00 மணி

குறிப்பு:-
மாணவர்கள் நலன் கருதி க. பொ. த. [சாதாரணம்] பரீட்சை நடைபெறும் வரை 93 மாணவர்களுக்கு கட்டணம் அறவிடாத இலவசக் கல்விச் சேவை. [சி-4946]


# புலிகளைச் சரணடைய வைக்க அரசாங்கம் தந்திரம்

## பேச்சு நடத்த ஜனாதிபதி விடுத்த அழைப்புக் குறித்து கிட்டு

கொழும்பு, மே 17

பேச்சுக்களை நடத்த வருமாறு ஸ்ரீலங்கா ஜனாதிபதி பிரேமதாச விடுத்த பிந்திய அழைப்பு அழகாக உள்ளது. அந்த அழைப்பின் பின்னால் அரசிடம் விடுதலைப் புலிகளைச் சரணடையச் செய்வது தான் பொதிந்திருக்கிறது.

மேற்கண்டவாறு விடுதலைப் புலிகள் பிரமுகர் சதாசிவம் கிருஷ்ணகுமார் [கிட்டு] கூறி இருக்கிறார்.

கனடாவில் இருந்து வெளிவரும் 'உலகத் தமிழர்' சஞ்சிகையில் கிட்டு தனது பெயரில் கட்டுரை ஒன்றை எழுதியிருக்கிறார்.

பேச்சுக்களை நடத்த வருமாறு ஜனாதிபதி பிரேமதாச விடுதலைப் புலிகளுக்கு விடுத்த பிந்திய அழைப்புக் குறித்து அக்கட்டுரையில் திரு கிட்டு மேலும் கூறியிருப்பதாவது;

இலங்கை அரசு புதிய யோசனை எதனையும் முன்வைக்கவில்லை.

இன்னும் மாகாணசபை முறை பற்றியே அரசு பேசி வருகிறது.

வடக்கு - கிழக்கு தமிழ் மக்களின் அபிலாஷைகளை திருப்தி செய்வதாக மாகாண சபை முறை அமையவில்லை.

மாகாணசபை அமுல் நடத்தப்பட்டும் பலனளிக்கவில்லை.

அமைதிப் படைக்கு எதிராக விடுதலைப்புலிகள் யுத்தத்தை நடத்தினர்.

புதிய யோசனைகளைத் தரும்படி இலங்கை அரசு விடுதலைப்புலிகளைக் கோரி வருகிறது.

தமிழர் பிரச்சினைக்கு அரைகுறைத் தீர்வு எதனையும் ஏற்க விடுதலைப்புலிகள் இயக்கம் தயாராக இல்லை.

நிரந்தரத்தீர்வு ஒன்றைக் காணுவதைத் தவிர்க்கும் நோக்குடன் தமிழர் குழுக்களிடையே போட்டி பூசலை வளர்த்துவிடும் முயற்சியில் இலங்கை அரசு ஈடுபட்டுள்ளது.

இந்திய அரசும் முன்னர் இந்த அணுகுமுறையைத் தான் கடைப்பிடித்தது.

இலங்கைப் படையினருக்கு எதிரான விடுதலைப் புலிகளின் யுத்தம் தொடரும். விடுதலைப் புலிகளைத் தோற்கடிப்பது என்பது கஷ்டமான காரியமாகும்.

இப்படி திரு. கிட்டு கூறியிருக்கிறார். [இ-எ]

## கொழும்பு புறப்பாடு

யாழ்ப்பாணம், மே 17

கொழும்பில் சிகிச்சை பெறுவதற்காக தெரிவு செய்யப்பட்ட நோயாளிகளையும், உதவியாளர்களையும் ஏற்றிக்கொண்டு குமண கப்பல் நேற்று முன்தினம் மாலை 4 மணிக்கு பருத்தித்துறையிலிருந்து கொழும்பு நோக்கிப் புறப்பட்டது. [ஓ-15]

# லஞ்ச ஆணையாளரை இனி நாடாளுமன்றமே கட்டுப்படுத்தும்

## சுயேச்சையாக செயற்பட வசதி

லஞ்ச ஆணையாளர் நாடாளுமன்றத்துக்கு மட்டுமே பதிலளிக்கக் கூடியவராக இருக்க வழி செய்யும் விதத்தில், ஊழல் மற்றும் லஞ்சத் தடுப்புச் சட்டம் ஒன்றைக் கொண்டு வருவதற்கும் அது தொடர்பான அரசமைப்புச் சட்டம் ஒன்றைக் கொண்டு வருவதற்கும் அரசு முடிவு செய்துள்ளதாகத் தெரிய வருகிறது.

சுயேச்சையான அமைப்பாக லஞ்சத் திணைக்களம் செயற்படவும் புதிய சட்டத் திருத்தம் வகை செய்யும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. [இ-எ]

# ஹோட்டல் கட்டணங்கள் வெளிநாட்டுப் பணத்தில்

கொழும்பு, மே 17

வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் ஹோட்டல் கட்டணங்களை வெளிநாட்டுக் கரன்சிகளிலே தான் செலுத்த வேண்டும் என்று அரசாங்கம் திட்டவட்டமாகக் கூறியிருக்கிறது.

இந்த நிபந்தனையை கடுமையாக அமுல் நடத்தும் படி சகல உல்லாசப்பயண ஹோட்டல்களுக்கும் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. [இ-எ]

# முகாமுக்குள் படையினர் காய்கறிச் செய்கை!

கொழும்பு, மே 17

வடபகுதியில் ஆயுத படை முகாம்களில் உள்ள சிப்பாய்கள் காய்கறிச் செய்கையில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று அறிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகளால் சுற்றிவளைக்கப்பட்டுள்ள இம் முகாம்களில் உள்ள படையினருக்கு தேவையான உணவு மற்றும் காய்கறிகள் முதலியவற்றை ஒழுங்காக விநியோகிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாலேயே காய்கறிச் செய்கையில் படையினர் ஈடுபட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருப்பதாக சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

உணவு விநியோகம் செய்யும் பாதைகளில் கண்ணி வெடிகள் புதைக்கப்பட்டுள்ளன. காடுகளின் மத்தியில் உள்ள படை முகாம்களுக்கு பொருள்களை ஏற்றிச் செல்லும் வாகனங்கள் விடுதலைப் புலிகளின் கெரில்லாத் தாக்குதல்களுக்கு இலக்காகின்றன என்றும் அந்த அதிகாரி சொன்னார். [இ-எ]


யாழ். பல்கலைக்கழகம்
இலங்கை

## மாணவர் வதிவிடம்

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்கள் தங்கியிருப்பதற்கு வீடுகள்/அறைகள் தேவைப்படுகின்றன.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அண்மையில் வீடுகள் உடையவர்கள் வீட்டினை/வீட்டின் ஒரு பகுதியினை வாடகைக்குக் கொடுக்க விரும்பினால் பல்கலைக்கழக மாணவர் நலச் சேவைகள் கிளை சிரேஷ்ட உதவிப் பதிவாளரைச் சந்திக்கவும். அத்துடன் அவரிடம் இதற்கெனவுள்ள படிவத்தைப் பெற்று பூரணப்படுத்திய விண்ணப்பங்களை 05-06-1991 இற்கு முன் அவரிடம் கொடுக்கவும்.

-பதிவாளர்.

(சி/5063)



Personal
New
Science Centre
Elilakam Front Lane,
Jaffna.

91 A/L
Paper Classes

| | |
|---|---|
| ZOO | - 6-30 a.m. |
| PHY. | - 7 30 a.m. |
| CHE. | - 8-30 a.m. |
| BOT. | - 9-30 |
| APP/PURE | a.m. |

[சி-4938]



BITSMANS
INSTITUTES MANIPAY

A/L 92 பிரிவு 3
கலை, வர்த்தகம்

பொருளியல் ... உதயன்
வர்த்தகம் ... தேவா
கணக்கியல் ... ராஜன்
அளவையியல் ... S. S. மனோகரன்
தமிழ்/இந்துநாகரிகம் ... பாலா
புவியியல் ... இக்னீசியஸ்

ஆரம்பம்: 18-5-91 Sat. 8-30 a.m
(குறிப்பிட்ட தொகை மாணவர்களே அனுமதிக்கப்படுவர்) (சி-4939)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

எம்மிடம் புதிய பழைய கினிமாப்பட வீடியோ கொப்பிகள் மலிவான விலையில் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ஜெனனி றேடர்ஸ், கண்டி வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். [4075]

ஆரம்ப சுகாதார வழிகாட்டி பேராசிரியர் த. இராமதாஸ் F.R.C.P, D.C.H. [குழந்தை வைத்தியத்துறை, மருத்துவ பீடம்] எழுதியது. கல்லூரி, நூலகங்கள் மற்றும் முதலுதவி போன்ற அனைத்து சுகாதாரப் பகுதியாளர்களுக்கும் ஓர் அரிய புத்தகம். வெளியீடு: உதயன் வெளியீட்டகம். விற்பனை: பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.

### சோதிட மாந்திரீகம்

உங்கள் பிரச்சினை எதுவாயினும் உடனடியாகத் தீர்வு காண்பதற்கு மட்டக்களப்பு பரம்பரை சோதிட மாந்திரீக நிபுணரைக் கலந்தாலோசியுங்கள் 'சக்தி சரவணா' 210, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். [யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானம் முன்பாக] தினசரி பகல் 9.00 மணி தொடக்கம் 3-30 மணி வரை சந்திக்கலாம். வியாழன் விடுமுறை. [16722]

### தேவை

தமிழ் — ஆங்கிலம் தட்டச்சு இயந்திரங்கள் உடன் தேவை. பழுதடைந்த தட்டச்சு இயந்திரங்களும் வாங்கப்படும் பியூடோ, 39/17, மின்சார நிலைய வீதி. 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். கிளை: பிரதான வீதி. மானிப்பாய். [C/4936]

### மணமகன் தேவை

35 வயதுடைய அரசாங்கத்தில் உதவி வைத்தியராகப் பணிபுரியும் பெண்ணுக்கு மணமகன் தேவை. தாரமிழந்தோர் விவாகரத்து பெற்றோரின் விண்ணப்பமும் கவனிக்கப்படும். ஆ. திருவிளங்கம், 16/16, வளன்புரம், கொழும்புத்துறை [பி.ப 2-00 மணிக்குப் பின் சந்திக்கலாம்] [16833]

சைவ போசன யாழ் இந்து அரசாங்க உத்தியோகத்தருக்கு செவ்வாய்க் குற்றமுள்ள பட்டதாரி, T.A, அதனோடு ஒத்த உத்தியோகமுள்ள மணமகன் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம். [16835]

யாழ்ப்பாண கத்தோலிக்க படிப்பும், பண்புமுள்ள ஆசிரியைக்கு 30-37 வயதுக்கிடைப்பட்ட ஒழுக்கமான மணமகன் தேவை. சத்தோலிக்கரல்லாதோரும் விண்ணப்பிக்கலாம். மங்கள ஏஜென்சி, கொய்யாத் தோட்டம் யாழ்ப்பாணம். [16834]

### சிறுபோகம்

சிறுபோக நெற்பயிர்ச் செய்கைக்கு நீமிரா உரத்தை அடிக்கட்டு உரமாகப் பாவித்துப் பயன் பெறுங்கள். விளைச்சலைப் பெருக்குகிறது பயிரைத் தாக்கும் நோய்கள், பூச்சிகளைத் தடுக்கிறது, ஒழிக்கிறது. கிலோ பக்கெற் ஒன்று ரூ 10/- மட்டும் மிக்கவைற் [சி 5057]

### பெண் லிகிதர் தேவை

தனியார் கல்வி நிலையத்திற்கு பெண் லிகிதர் தேவை. சனி ஞாயிறு தினங்களில் நேரில் தொடர்பு கொள்ளவும். 'A' Level Centre, பருத்தித்துறை வீதி, 1 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். [சி-4948]

### தவறிவிட்டது

எனது மோட்டார் சைக்கிள், C 70க்கு சேர்ந்த பதிவுப் புத்தகம் அதற்குரிய இன்சூரன்ஸ் மற்றும் பதிவு ஏடுகளும் வைரமுழ பிள்ளையார் கோவிலுக்கும், தெற்கு புன்னாலைக் கட்டுவன் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து வைரமுழ தபாற்கந்தோருக்கு முன்பாக ஒழுங்கையில் உள்ள சோதி என்பவரிடம் ஒப்படைக்கவும். [16827]

### அறிவகம்

பாடசாலைப் புத்தகங்கள், கொப்பிகள் ஏனைய உபகரணங்கள், பேப்பர் வகைகள் குறைந்த விலையில் விற்பனையாகின்றன. அறிவகம், 374, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். [வெலிங்டன் சந்திக்கருகில்] [சி-4947]

### தேவை

மலைவேம்பு விதை தேவை. மிக்கவைற், யாழ்ப்பாணம். [சி-5059]

### ஆங்கிலக் கல்வி

G. C. E. [O/L] 90 ஆங்கில வினாத்தாள் விசேட வகுப்புகளும், ஆண்டு 1, 2, 3, 4 களுக்கான சொற்பொழிவுகளையும் [Elocution] மாணவர்களின் வசதிகளுக்கேற்ப விரைவில் ஆரம்பமாகவுள்ளன. By Manjula Balasingam 21/2, அம்மன் வீதி, கந்தர்மடம். [16787]

### ஜோதிடம்

கல்வி, விவாகம், தொழில் ஆகியவற்றிற்குரிய தடைகள் அதற்கான காரணங்களும், சாந்தி பரிகாரங்களும் கூறப்படும். வாழ்க்கையில் எந்தப் பிரச்சினைகளும் தீர்க்கப்படும். நேரில் வரவும். பலன் தவறினால் பணம் திரும்பப் பெற உத்தரவாதம். ஸ்ரீ மாவை விநாயகர் சோதிட நிலையம், 146, [402] பருத்தித்துறை றோட், அரசடிச் சந்தி, நல்லூர். [16836]

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தாயக மண்ணில்:
03 - 06 - 1956

கானக மண்ணில்:
19 - 05 - 1988

திதி: 17 - 05 - 1991

அமரர்

**முருகேசு சண்முகரெட்ணம் [தயா]**

[பங்காளர், சுமரனா மோட்டேர்ஸ்]

கண்ணினால் சிரிக்கும் உன்
கள்ள நகை கண்டுமா,
கயவர் கடிவில் காலன்
உனை கவர்ந்துவிட்டான்
கண்களிரண்டில் உனை தெய்வமென ஏற்றி
காத்திருக்கின்றோம் உன் வரவிற்காக...

கண்ணீர் மலரினால் நினைவு கூரும்:
மனைவி, பிள்ளைகள்,
தாய், தகப்பன், சகோதர சகோதரிகள்,
மருமக்கள்

249A நாவலர் வீதி,
யாழ்ப்பாணம் [சி/4943]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்: 22 — 3 — 1929



மறைவு: 17 — 4 — 1991

அமரர்

**முத்தையா கனகராசன்**

17-5-91 வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம். அன்னாரின் மரணக்கிரியையில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி.

அவரின் பிரிவால் துயருறும்,
மனைவி, மக்கள், மருமக்கள், தாய்,
சகோதரர்கள், சிறியதாய் வள்ளியம்மை
[16720]

# தணிக்கை செய்யப்படாத வீடியோப் படங்கள்

## தி. மு. க. பயன்படுத்துகிறதாம்

சென்னை, மே 17

தேர்தல் பிரசாரத்துக்கு தி.மு.க. பயன்படுத்தும் இரண்டு வீடியோ கஸட்டுகள் தணிக்கை செய்யப்படவில்லை.

இப்படி தமிழக மாநில அரசு பொலீஸாருக்கு அறிவித்துள்ளது.

ஜனாதிபதி வெங்கட்ராமன், பிரதமர் சந்திரசேகர், முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி மற்றும் அ. தி. மு. க பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா ஆகியோரை இழிவுபடுத்தும் விதத்தில் அவ் வீடியோப் படங்கள் தயாரிக்கப்பட்டிருப்பதாக அ.தி.மு.க. துணைப்பொதுச் செயலாளர் ஆர். எம். வீரப்பன் மாநில அரசிடம் புகார் செய்து இருந்தார்.

அதைத் தொடர்ந்தே, தணிக்கை செய்யப்படாத அவ்வீடியோப் படங்களை பயன்படுத்துவது குறித்து நடவடிக்கை எடுக்கும்படி மாநில அரசு பொலீஸாரைக் கேட்டுள்ளது. [இ-எ]

## கூடைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டி

யாழ்ப்பாணம், மே 17

யாழ், பல்கலைக் கழக விளையாட்டுக் கழகம் ஆண்-பெண் கூடைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டி ஒன்றை நடத்தவுள்ளது. இதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. [இ-த]

## 31 ஆம் நாள் நினைவுக் காணிக்கை



அமரர்

**வேலுப்பிள்ளை சின்னத்துரை**

அவர்கள்

[சண்டாக்கர் — I. P. W.]

தோற்றம்: 1905 - 06 - 05 நிறைவு: 1991 - 04 - 17

என்றும் எம் நினைவகலா நினைவான எங்கள் ஒளிவிளக்கே! எமது இதய அஞ்சலிகள்:

அமரர் சின்னத்துரை குடும்பத்தினர்

அம்பிகைவாசா,
ஆஸ்பத்திரி வீதி, சாவகச்சேரி. [16721]

## மரண அறிவித்தல்

### விக்ரோறியா ரட்ணம் செபஸ்தியன்

உடுவிலைச் சேர்ந்த விக்ரோறியா ரட்ணம் செபஸ்தியன் 16-05-91 இல் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற சாமுவேல் வைரவின் மகளும், காலஞ்சென்ற K. A. செபஸ்தியன் [இளைப்பாறிய மாவட்ட நீதிமன்ற காரியதரிசி] இன் மனைவியும், நீற்றா, சிசில், சந்திரா [Canada], இருந்தா [U. S. A.] வின் தாயாரும், பற்றிக் [இளைப்பாறிய மேலதிக அரசாங்க அதிபர்], சிவராசா [சட்டத்தரணி, மட்டக்களப்பு], காலஞ்சென்ற ஜெயராசா, கலாநிதி சிவராசா [U. S. A.] யின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் 16-05-91 இல் நடைபெற்றது. இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பி. எல். பற்றிக்.
சுவாமி ஞானப்பிரகாசர் வீதி,
உடுவில், சுன்னாகம் [16832]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

## இது தந்திரம்!

வடக்கு-கிழக்கு மாகாண மக்களுக்கு-தமிழ் மக்களுக்கு-நிவாரணமாக உலர் உணவுப் பொருள்களை வழங்குவதை நிறுத்திவிட்டு, பணம் வழங்கு வது என்ற புதிய யோசனையை ஒன்றை கொழும்பில் உள்ள அரசாங்க அதிகாரிகள் முன் வைத்துள்ளார்கள்!

கொழும்பிலிருந்து உணவுப் பொருள்களை அனுப்புவதில் உள்ள சிரமங்கள், நஷ்டங்கள், அதிக செலவினங்கள் என்பன வற்றைக் காரணம் காட்டிப் பணம் வழங்கும் மாற்றுத் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கு அந்த அதிகாரிகள் மிகவும் அவசரப் படுகிறார்கள்.

இதனைப் புதிய திட்டம் என்று சொல்வதற்குப் பதிலாக, நயவஞ்சகமான தந்திரம் என்று சொல்வதே சரி. தமிழ் மக்களைப் பட்டினி போடுவதன் மூலம் அவர்கள் மீது அழுத்தத்தைக் கொடுத்து குறைந்த பட்ச உரிமைகளை வழங்குவதற்கான அரசியல் சூழ்ச்சியின் ஓர் அங்கம் இது.

மக்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களில் பத்துச் சத வீதத்துக்கும் குறைவாகவே தமிழ்ப் பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப் படுகின்றது.

மக்களின் தேவையைப் பூர்த்தி செய்யக் கூடிய அளவுக்கு உணவுப் பொருள்கள் அனுப்பப்படாமையால் அவர்கள் கஷ்டப்படுகிறார்கள் என்று அரச அதிபர்கள் முறைப்பாடு செய்ததும், மாற்றுத் திட்டம் பற்றி கொழும்பு அதிகாரிகள் பிரஸ்தாபிக்கிறார்கள்.

வர்த்தகர்களோ, சமூக நலனில் அக்கறை உள்ளவர்களோ, தொண்டர் நிறுவனங்களோ உணவுப் பொருள்களை கொண்டுவர முடியாமல் தடுக்கப்பட்டுள்ளன அல்லது கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. இல்லையேல் தொந்தரவுகள், தொல்லைகள், கஷ்டங்கள் கொடுக்கப் படுகின்றன.

அதனால் உணவுப் பொருள் பற்றாக்குறை மக்களின் அன்றாட வாழ்க்கையை ஆட்டம் காண வைத்துள்ளது. கொள்வனவு செய்வதற்குச் சந்தையில் போதிய உணவுப் பொருள் இல்லாமல் இருக்கும் போது, பணத்தை வைத்து மக்கள் என்ன செய்வது? அதனைச் சமைத்துக் குடிக்கலாம் என்று கொழும்பு அதிகாரிகள் எண்ணுகிறார்களோ...?

மொத்தத்தில் தமிழ் மக்களுக்குத் தாம் தேவையான வசதிகளைச் செய்வதாக வெளியில் காட்டிக் கொண்டால் போதும் என்பது அரச அதிகாரிகளின் நிலைப்பாடு. ஆனால் அவர்களைப் பட்டினி போட்டு, வாட்டி வதைத்து, சித்திரவதை செய்து, கொலை செய்து, உரிமைப் போராட்டம் நடத்துவதற்காக வஞ்சம் தீர்க்க வேண்டும் என்பதே உள்ளார்ந்த நோக்கம். உரிமைப் போராட்டத்தை நசுக்கி விட வேண்டும் என்பதே குறிக்கோள்.

அரசின் பொருளாதாரத் தடையை முறியடிக்கும் விதத்தில் தமிழ்ப் பகுதியில் உணவு உற்பத்தி நடத்து வருகிறது. சுய தேவையைப் பூர்த்தி செய்யும் அளவுக்கு அது விரைவுபடுத்தப்பட வேண்டும். அது வேறு விடயம்?

தமிழர்களை அரசு இன்னமும் தனது பிரஜைகள் என்று கருதுமானால், உலர் உணவுப் பொருள்களுக்குப் பதிலாக பணம் வழங்கும் திட்டத்தை கைவிடுவது மட்டுமன்றி, அவர்கள் மீது விதித்துள்ள பொருளாதாரத் தடையை முற்றாக நீக்க வேண்டும். அவ்வாறு செய்யுமா?, பார்ப்போமே!

# வீடுகளைத் தகர்க்க முன் உடைமைகள் சூறையாடல்

## வவுனியாவில் படையினர் பின்வாங்கமுன் பெரும் நாசம்

வவுனியா, மே 17

வவுனியாவில் கடந்த 13 ஆம் திகதி வரை இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின் போது படையினரால் பல வீடுகள் தகர்க்கப்பட்டன என்றும் வீடுகளைத் தகர்க்க முன்னர் அவற்றில் இருந்த பொருள்களைப் படையினர் சூறையாடினர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

வவுனியாவுக்கு வடக்கே நெளுக்குளம், கொந்தக்காரன்குளம், கதிரவேலர் பூவரசங்குளம், மாதர்பணிக்கர் மகிழங்குளம் ஒமந்தை ஆகிய இடங்களிலேயே பெரிய அளவில் அழிப்பு வேலைகள் இடம்பெற்றன.

வீடுகள் தவிர பாடசாலைகள், கோவில்கள், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகள், 30க்கும் மேற்பட்ட கடைகள் மற்றும் அரச கட்டடங்களும் சேதமாக்கப்பட்டுள்ளன.

இவற்றைவிட விமானத் தாக்குதல்கள் காரணமாக பெரும் அளவில் பயிர்களும் அழிக்கப்பட்டுள்ளன என்று கூறப்படுகிறது.

[இ - 15]

## ஆஸ்பத்திரி ஊழியருக்கு மண்ணெண்ணெய்

யாழ்ப்பாணம், மே 17

யாழ் போதனா வைத்தியசாலை ஊழியர்களுக்கு இரண்டாவது தடவையாக நேற்று முந்தினம் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டது.

லீற்றர் 10 ரூபா வீதம் ஒருவருக்கு 2 லீற்றர் மண்ணெண்ணெல் வழங்கப்பட்டது.

[இ - 15]

## டிப்ளோமா பரீட்சை

அச்சுவேலி, மே 17

யாழ் பல்கலைக்கழகத்தில் பட்டதாரி ஆசிரியர்களுக்காக நடத்தப்படும் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பரீட்சைகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

விண்ணப்பங்கள் இம்மாத முடிவுக்குள் பல்கலைக்கழக பரீட்சைப் பகுதியில் ஒப்படைக்கப்பட வேண்டும்.

[இ-11]

## முன்னாள் எம். பி. கைது

கொழும்பு, மே 17

தேர்தல் முறைகேடு தொடர்பாக பொல்காவலைத் தொகுதியின் முன்னாள் எம்.பியான கனில் ரஞ்சன் ஜயக்கொடி பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்

வழக்காளர்களை வாகனத்தில் ஏற்றி இறக்கிக் கொண்டிருந்த சமயம் அவர் கைது செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. [இ-எ]

## சுதேச வைத்திய மூலிகைகள் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மே 17

"சுதேசவைத்தியத்தில் மூலிகைகளின் பங்கு" என்னும் பொருள் பற்றிய கருத்தரங்கு இன்று 17 ஆம் திகதி பிற்பகல் 3 00 மணிக்கு யாழ் பல்கலைக்கழக பௌதீகவியல் விரிவுரை மண்டபத்தில் நடைபெறும்.

விவசாய பீட சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி பா. சிவகடாட்சம் கருத்தரங்கை நடத்துவார்.

விஞ்ஞான சங்க ஆதரவில் கருத்தரங்கு நடைபெறுகிறது.

[இ]

## காரைநகர் மாணவர்களுக்கு மாலை நேர வகுப்புகள்

யாழ்ப்பாணம், மே 17

இடம் பெயர்ந்துள்ள காரைநகர் மாணவர்களின் வசதி கருதி இன்று வெள்ளிக்கிழமை முதல் சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி, வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் நாவலர் மகா வித்தியாலயம் ஆகியவற்றில் மாலை நேர வகுப்புகள் ஆரம்பமாகின்றன.

மாலை நேர வகுப்புகள் பிற்பகல் ஒரு மணிக்கு ஆரம்பமாகும்

தமது பெயர்களைப் பதிவு செய்த மாணவர்கள் தாம் வசிக்கும் இடங்களுக்கு சமீபமாக உள்ள மேற்கண்ட ஒரு பாடசாலையில் இன்று முதல் அனுமதிக்கப்படுவர்.

மாணவர்கள் தமது பெயர்களைப் பதிவு செய்த பாடசாலைகளுக்கு இன்று வருமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

அதே சமயம் மேற்கண்ட மூன்று பாடசாலைகளுக்கும் சமீபமாக வசிக்காத மாணவர்களுக்கு, அவர்கள் வசிக்கும் இடங்களுக்கு, சமீபமாக உள்ள மற்றைய பாடசாலைகளில் அனுமதி வழங்கவும் முடிவாகி இருக்கிறது என பண்டத்தரிப்பு உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. ப. சண்முகராசா தெரிவித்தார். இதற்கான பணிப்புரையை கல்விப் பணிப்பாளர் விடுத்துள்ளார் என்றும் அவர் கூறினார்.

[இ]

## சித்த மருத்துவ உற்பத்தி பொருள்கள் வெளியீடு

யாழ்ப்பாணம் மே 17

யாழ் பல்கலைக்கழக சித்த மருத்துவத் துறையினரின் சித்த மருத்துவ இயற்கை உற்பத்திப் பொருள்களின் வெளியீடு இன்று 17 ஆம் திகதி காலை 9-30 மணிக்கு கைதடி சித்த மருத்துவ அரங்கில் இடம்பெறும்.

யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா இதனை வெளியிட்டு வைத்து சிறப்புரையாற்றுவார்.

தற்காலிக சூழ்நிலையில் எமது மண்ணின் மூலவளங்களைப் பயன்படுத்தி மக்களின் மருத்துவ சுகாதார சேவைகளைப் பூர்த்தி செய்யும் முகமாகவும் அவற்றின் தன்னிறைவு அடைவதற்கான ஆரம்ப நடவடிக்கையாகவும் மூலிகைகளினாலான இந்த இயற்கை உற்பத்திப் பொருள்களின் வெளியீடு அமைகிறது.

வெளியிடப்படும் பொருள்கள் அல்லது மருந்து வகைகள் வருமாறு:

1. சுக்மலி - மூலிகைகள் சேர்ந்த ஆரோக்கிய கோப்பி பானம்
2. சத்து - நிறைவுணவு
3. வஜ்ராபற்பொடி - இயற்கை மூலிகையினாலானது
4. கலா நுளம்புச் சுருள்
5. குறிஞ்சி பிஸ்கெட் - நீரிழிவு நோயாளருக்கானது.
6. நீர்கோவை - தலைவலி பூச்சு மாத்திரை, மற்றும்
7. சுரபேதி மாத்திரை, 8. சுரக்குடிநீர், 9. இருமல் குடிநீர், 10. அதிசார குடிநீர், 11. சிறுவர் கிருமிக் குடிநீர்.

## உற்பத்திக் குழு அங்குரார்ப்பணம்

பூநகரி, மே 17

செட்டிகுறிச்சி கிராம சேவை அலுவலர் பிரிவு உற்பத்திக்குழு அங்குரார்ப்பணக் கூட்டம் பூநகரி வட்ட அவைத் தலைவர் திரு கே ரி. புவனேந்திரன் தலைமையில் பூநகரி செட்டிகுறிச்சி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் நடைபெற்றது [இ - 135]

## பிரான்ஸுக்கு பெண் பிரதமர்

பாரிஸ், மே 17

பிரான்ஸ் நாட்டின் முதலாவது பெண் பிரதமராக 57 வயது நிரம்பிய எடிட் கிரசென்ற் நியமிக்கப்பட்டுள்ளார். [இ]

## நேபாளத்தில் காங்கிரஸ் முன்னணி

காத்மண்டு, மே 17

நேபாள நாடாளுமன்றத் தேர்தலில் வெளியான 178 முடிவுகளின்படி—

நேபாள காங்கிரஸ் 91 தொகுதிகளில் வெற்றியீட்டியது.

நேபாள மார்க்ஸிய லெனினக் கட்சிக்கு 63 ஆசனங்கள் கிடைத்தன. எஞ்சிய தொகுதிகளை ஏனைய கட்சிகள் பகிர்ந்துகொண்டன.

இன்னும் 27 தொகுதிகளின் முடிவுகள் மட்டுமே வெளிவர வுள்ளன.

அறுதிப் பெரும்பான்மையைப் பெறுவதற்கு நேபாளக் காங்கிரஸுக்கு 11 ஆசனங்கள் தேவைப்படுகின்றன. [இ-எ]

## வலைப்பந்தாட்ட போட்டி

உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கிடையே யாழ் மாவட்டத்தில் அண்மையில் வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி ஒன்று நடைபெற்றது

மானிப்பாய் மெமோரியல் கல்லூரியில் இடம் பெற்ற இப்போட்டியில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த ஒன்பது உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் பங்குபற்றின.

யாழ் மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி திரு. சி கண்ணத்துரை தலைமையில் நடைபெற்ற இப்போட்டியில் தெல்லிப்பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவு முதலாம் இடத்தையும், யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் பிரிவு இரண்டாவது இடத்தையும் பெற்றுக் கொண்டன. [இ-100]

## மென் பந்து கிரிக்கெட்

யாழ்ப்பாணம், மே. 17

யாழ் மாநகரசபை சனசமூக நிலையங்களின் சமாசம் நடத்தும் 7 பேர் கொண்ட அணிகளுக்கு இடையிலான 12 ஓவர்கள் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் 32 சனசமூக நிலைய அணிகள் பங்குபற்றுகின்றன.

நாளை 18 ஆம் திகதி ஆரம்பமாகும் இச்சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டம் இம் மாதம் 28 ஆம் திகதி மாலை 4 00 மணிக்கு நடைபெறும்.

இப் போட்டியின் சகல ஆட்டங்களும் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறும் [இ]

# காயமடையும் படையினரில் மூவரில் ஒருவர் ஆயுள் முழுதும் நிரந்தர ஊனமடைகின்றார்

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகளுடனான யுத்தத்தில் காயமடையும் படையினரில் மூன்று பேருக்கு ஒருவர் ஆயுள் முழுவதும் நிரந்தர ஊனமடைகின்றார்.

இப்படி கொழும்பில் இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதுவரை காயமடைந்த படையினரில் ஆயிரத்துக்கு அதிகமானோர் ஆயுள்முழுவதும் ஊனமடைந்தவர்களாக வாழவேண்டிய நிலையில் உள்ளனர் என்றும் இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்த ஆண்டு [illegible] வடக்கு - கிழக்கு [illegible] தில் ஆரம்பமான யுத்தத்தில் இதுவரை 3046 படையினர் காயமடைந்தனர் என்று இராணுவ அதிகாரிகள் கூறினர்.

இந்த எண்ணிக்கையில் கடந்த வாரம் முடிந்த வன்னி இராணுவ நடவடிக்கையின் போது காயமடைந்த படையினரின் எண்ணிக்கை சேர்க்கப்படவில்லை

### ஜொனி நிலக்கண்ணி

காயமடைந்த படையினரில் பெரும்பாலோர் தங்கள் அங்கங்களை ஜொனி நிலக்கண்ணித் தாக்குதலில் இழந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

[illegible] செயலிழந்துள்ளனர் என்றும் இன்னும் பலர் குண்டு வெடிப்பு மற்றும் துப்பாக்கிச் சூட்டில் சிக்கி நிரந்தரமாக விழிப்புலனை இழந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அங்கங்களை இழந்தவர்களுக்கு சிகிச்சையின் பின்னர் ஆயுதப்படை அலுவலகங்களில் லிகிதர் வேலைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

கொழும்பில் உள்ள இராணுவ ஆஸ்பத்திரியில் உள்ள மூன்று சத்திர சிகிச்சை நிபுணர்கள் காயமடைந்த படையினருக்குத் தினமும் 30 சத்திர சிகிச்சைகள் என்ற வீதம் செய்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை - காயமடைந்த படையினரில் சிலரை மேலும் சத்திர சிகிச்சைக்காக வெளிநாடுகளுக்கு அரசு அனுப்பி வைத்துள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பில் இஸ்ரவேல் நலன்புரி அலுவலகம் மூடப்பட்டதன் பின்னரே தய்வானுக்கு காயமடைந்த படையினரை இலங்கை அனுப்ப ஆரம்பித்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் வடக்கு-கிழக்கு யுத்தத்தில் காயமடைந்த படையினர் கொழும்புக்கு கொண்டுவரப்பட்ட பின்னர், இராணுவ ஆஸ்பத்திரி தவிர்ந்த ஏனைய ஆஸ்பத்திரிகளுக்கு அவர்கள் சிகிச்சைக்காக அனுப்புவதை நிறுத்துவது என்று இராணுவத் தலைமைப் பீடம் தீர்மானித்துள்ளது. [இ-எ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொலைக்கல்வி பயிற்சி இறுதிப் பரீட்சை நாளை

தொலைக்கல்வி ஆசிரிய பயிற்சிநெறி இறுதிப்பரீட்சை [முதலாம் தொகுதி] நாளை திருநெல்வேலியில் உள்ள பலாலி ஆசிரிய பயிற்சிக்கலாசாலையில் ஆரம்பமாகவுள்ளது.

இந்தப் பரீட்சைக்கான விண்ணப்பங்களும், அனுமதி அட்டைகளும் கொழும்பிலிருந்து யாழ் கல்வித் திணைக்கள அதிகாரிகளினால் எடுத்துவரப்பட்டுள்ளன.

பரீட்சைக்குத் தோற்றவுள்ளவர்கள் தத்தமது அனுமதி அட்டை, நேரசூசி போன்றவற்றை இன்று யாழ். இந்துக்கல்லூரியில் உள்ள தொலைக்கல்விப் பயிற்சி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. [ஒ-5]

# தொண்டர் ஆசிரியர் பதவி; மேலும் 180 பேருக்கு!

தொண்டர் ஆசிரியர் நேர்முகப்பரீட்சைக்கு தோற்ற தகுதியுள்ள மேலும் 180 பேரின் பெயர்ப்பட்டியல் யாழ். கல்வி அலுவலகத்துக்கு வந்து சேர்ந்துள்ளது.

தொண்டர் ஆசிரியர் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்ற தகுதியுள்ள 800 பேரின் பெயர்ப் பட்டியல் ஏற்கனவே இங்கு வந்து சேர்ந்து விட்டது.

இந்தப் பட்டியலில் இடம் பெறாத—மேன் முறையீடு செய்தவர்களில் 180 பேரின் பெயர் விவரங்களே வந்து சேர்ந்துள்ளன.

இவர்களுக்கான நேர்முகப் பரீட்சையை நடத்தி தெரிவானவர்களின் பட்டியலை விரைவில் கொழும்புக்கு அனுப்ப யாழ் கல்வி அலுவலகம் நடவடிக்கை எடுத்துள்ளது. [ஒ-8]

# முல்லைத்தீவு வங்கி வவுனியாவுக்கு மாறுமா?

யாழ்ப்பாணம், மே 17

தற்சமயம் மூடப்பட்டுள்ள இலங்கை வங்கியின் முல்லைத்தீவுக் கிளையை வவுனியாவில் இயக்குவது தொடர்பாகக் கொழும்பில் ஆராயப்பட்டுள்ளது.

அத்தியாவசிய சேவைகள் திணைக்களத்தில் கடந்த வாரம் நடைபெற்ற அரச அதிபர்கள் கலந்து கொள்ளும் மாதாந்தக் கூட்டத்தில் இது பற்றி ஆராயப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு வங்கிக் கிளை, இராணுவம் நிலைகொண்டுள்ள பகுதியில் அமைந்துள்ளதாகவும்—

வங்கியின் சகல ஆவணங்களும் வங்கிக்குள் இருப்பதாகவும்—

வங்கி ஆவணங்களை வவுனியாவுக்கு எடுத்துச் சென்று அங்கு வாடிக்கையாளர்களுக்கு சேவையாற்ற ஒழுங்குகளை மேற்கொள்ளலாம் — என்றும் அந்தக் கூட்டத்தில் ஆலோசனை தெரிவிக்கப்பட்டது [ஒ-3]

# மும்மடங்கு மாணவர் புலமைப் பரிசில் பெறுவர்

ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசிலைப் பெறும் மாணவரின் எண்ணிக்கையை 2,500 இல் இருந்து 7,500 ஆக இந்த ஆண்டில் இருந்து அதிகரிப்பது என்று அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

தெரிவு செய்யப்படும் ஒவ்வொரு மாணவரும் புலமைப்பரிசிலாக ஆண்டு தோறும் 2,400 ரூபா பெறுவர். இதற்காக செலவிடும் தொகையை 60 லட்சம் ரூபாவாக அதிகரிக்கவும் அமைச்சரவை முடிவு செய்துள்ளது. [ஒ-எ]

## பஞ்சாப் மாநிலத்தில்

# பிரபல கம்யூ. தலைவரும் குடும்பத்தினரும் கொலை

பஞ்சாப் மாநிலத்தில் பிரபல கம்யூனிஸ்ட் கட்சி தலைவர் ஒருவரும் அவரது குடும்ப உறுப்பினர்கள் எண்மரும் சீக்கியத் தீவிரவாதிகளினால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

நேற்று நடந்த இந்தப் பயங்கரச் சம்பவத்தில் கம்யூனிஸ்ட் தலைவரின் மெய்ப்பாதுகாவலர்கள் மூவரும் உயிரிழந்தனர் என்றும் அறிவிக்கப்பட்டது. [ஒ-எ]

## தமிழக தேர்தல் நாட்களில்

# ஈழ அகதிகள் வெளியில் நடமாடுவதற்குத் தடை!

சென்னை, மே 17

முகாம்களில் தங்கியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளை இம் மாதம் 25 26 ஆம் திகதிகளில் வெளியில் நடமாட அனுமதிப்பதில்லை என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.

தமிழ் நாட்டின் சட்டசபை, நாடாளுமன்றத் தேர்தல்களில் இலங்கை தமிழரின் தலையீடு இருப்பதை தவிர்ப்பதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது. [ஒ-எ]

# கம்பன் கழக நாடக அரங்கு

அகில இலங்கை கம்பன் கழகத்தின் பத்தாண்டு நிறைவு நிகழ்ச்சித் தொடரில் நாளை மறுதினம் 19ஆம் திகதி பிற்பகல் 3-00 மணிக்கு நல்லூர் கம்பன் கோட்டத்தில் நாடக அரங்கு இடம்பெறுகிறது.

புகழ்பெற்ற ஆறு நாடகங்களில் இருந்து முக்கிய பாத்திரங்கள் காட்சியும் காணுமாக மேடை ஏற்றப்படுகின்றன.

யாழ்ப்பாணப் பாரம்பரிய இசை, நாடக முன்னணி கலைஞர்கள் இவற்றை மேடை ஏற்றுகின்றனர். [இ]

# 8 இடங்களில் கவுண்டர் போட்டி!

சென்னை, மே 17

செங்கல்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த திரு வீரப்பன் கவுண்டர் இம் முறை இந்தியப் பொதுத் தேர்தலில் 8 தொகுதிகளில் போட்டியிடுகிறார் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி, பிரதமர் சந்திரசேகர், அ. தி. மு. க. பொதுச்செயலாளர் ஜெயலலிதா ஆகியோர் போட்டியிடும் தொகுதிகளும் இவற்றில் அடங்குகின்றன.

திரு வீரப்பன் கவுண்டர் இந்திய பொதுத் தேர்தல் ஒவ்வொன்றிலும் பல தொகுதிகளில் ஒரே சமயத்தில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடுவது வழமையாகும். [ஒ-எ]

# சூடாநாட்டில் றெட்பானா அதிகாரிகள்

யாழ்ப்பாணம், மே 17

றெட்பானா அமைப்பின் மூன்று அதிகாரிகள் நேற்று சூடாநாட்டின் பல பகுதிகளுக்கும் விஜயம் செய்தனர்.

இலங்கை வதிவிடப் பிரதிநிதி திரு ஜேக்கப் செல்மா தலைமையில் வந்த இந்தமூன்று அதிகாரிகளும் றெட்பானா அமைப்பு மேற்கொள்ளும் நிவாரண வேலைகளைப் பார்வையிட்டனர்.

யாழ் அரச அதிபர் திரு கே. மாணிக்கவாசகர் உட்பட மற்றும் பல அதிகாரிகளையும் இவர்கள் சந்தித்துப் பேசினர். [ஒ-3]

# வெடி விபத்தில் மரணம்

யாழ்ப்பாணம், மே 17

மட்டக்களப்பு தங்.வேலாயுதபுரத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை தவறுதலாக இடம் பெற்ற வெடிவிபத்தில் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த கஜன் என்ற போராளி மரணம் அடைந்தார். [உ]

# இலங்கை..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

விலை அளிக்க வேண்டும்.

இலங்கையின் ஒருமைப்பாட்டை விரும்புவதாக இந்திரா காங்கிரஸ் தனது தேர்தல் அறிக்கையில் கூறியுள்ளது

செய்தியாளர்:-

அப்படி இலங்கையின் ஒருமைப்பாட்டை இந்தியா விரும்புவதானால், 1983-1984 ஆம் ஆண்டுகளில் இந்திய தமிழ்ப் போராளிக் குழுக்களுக்கு ஆயுத உதவி அளித்து இருக்கத் தேவை இல்லை அல்லவா!

சிதம்பரம்:-

இனப் படுகொலையில் இருந்து தமிழர்கள் தங்களைக் காப்பாற்றிக் கொள்ளவே தான், நாம் உதவி அளித்தோம்.

இனிமேலும்கூட இலங்கைத் தமிழர் மீது இனப் படுகொலை தொடர்ந்தால் அவர்கள் தங்களைக் காப்பாற்றிக் கொள்ள இந்தியா உதவி அளிக்க வேண்டும் என்பதுதான் எனது கருத்து.

இலங்கையில் இருந்து அகதிகள் வந்தாலும் சரி, போராளிகள் வந்தாலும் சரி, அவர்களுக்கு நாம் புகலிடம் அளிக்க வேண்டும். ஆனால் அவர்கள் தமிழகத்தில் சட்ட விரோதமான நடவடிக்கை [illegible] [அ-எ]

## பங்களாதேஷின் மாஜி பிரதமரான

# தலைமறைவாகித் திரிந்த எர்ஷாத்தின் சகா கைது!

முன்னாள் ஜனாதிபதி ஜெனரல் எர்ஷாத் பதவி கவிழ்ந்ததைத் தொடர்ந்து, தலைமறைவான முன்னாள் பிரதமர் காஸிப் அஹமத். நேற்று தலைநகர் டாக்காவில் நாடாளுமன்றக் கட்டடம் அருகில் வைத்து பொலீஸாரால் கைது செய்யப்பட்டார்.

தலைமறைவாக இருந்து கொண்டே அவர் கடந்த பெப்ரவரியில் நடந்த பொதுத் தேர்தலில் வெற்றியீட்டி எம். பி. யானார்.

கைதானவுடன் அவரை பொலீஸார் டாக்கா மத்திய சிறையில் ஜெனரல் எர்ஷாத்துடன் காவலில் வைத்தனர் என்று அறிவிக்கப்பட்டது. [ஒ எ]

## கடும் பாதுகாப்பு

தமிழ்நாடு சாத்தூர் சட்டசபைத் தொகுதியில் அ. தி. மு. க. பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா பேசிய கூட்டத்திற்கு பொலீஸார் கூடுதல் பாதுகாப்பு அளித்தார்கள்.

ஜெயலலிதா பேசிய கூட்ட மேடையை குண்டு வைத்துத் தகர்க்கப் போவதாக பொலீஸாருக்கு அனாமதேய பயமுறுத்தல் விடுக்கப்பட்டதைத் தொடர்ந்தே, அந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

# கொழும்பில் உள்ள..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

த் தங்கி உள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்தவர்களை அழைத்துச் சென்று அங்கேயே தங்க வைக்கவும்—

யாழ்ப்பாணம், வவுனியா மாவட்டங்களைச் சேர்ந்தவர்களை வவுனியா மாவட்டத்தில் இணமருதங்குளத்தில் முகாம் அமைத்து தங்கவைக்கவும்—

படையினரும், அத்தியாவசிய சேவைகள் நாயகமும் இணைந்து நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக அறிய வந்துள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாணத்தின் அத்தியாவசிய சேவைகள் தொடர்பாக கொழும்பில் மாதாந்தம் இரு கூட்டங்கள் நடைபெறுவதுண்டு.

ஆப்பிரிக்க பற்றி நடைபெற்ற அடுத்தடுத்த இரு கூட்டங்களில் கொழும்பில் தங்கியிருக்கும் தமிழ் அகதிகளை மட்டக்களப்பு, வவுனியாப் பகுதிகளுக்கு அனுப்புவது குறித்து பல விடயங்கள் ஆராயப்பட்டன.

கொழும்பிலிருந்து மட்டக்களப்புக்கு மாற்றப்படும் தமிழ் அகதிகளுக்கு பின்வரும் வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு முடிவாகியுள்ளது.

★ மட்டக்களப்பில் அமைக்கப்படும் விசேட முகாம்களுக்குப் போதிய பாதுகாப்பு வழங்குவது.

★ இடம் மாற்றப்படுவதற்கு முன்னர் கொழும்பில் வைத்து ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் 6,500 ரூபா வழங்குவது.

★ கொழும்பில் வைத்தே 500 ரூபாவும் இரண்டு வாரங்களுக்கான உலர் உணவும் வழங்குதல்.

★ மட்டக்களப்புச் சென்றதும் அங்கு மீதி நிவாரண உதவிகளை வழங்குதல்.

இதே வசதிகளை வவுனியாவுக்கு இடமாற்றம் செய்யும் அகதிகளுக்கு விஸ்தரிப்பது குறித்தும் ஆராயப்பட்டது. [அ 3]

# மரண அறிவித்தல்கள்

## தம்பிப்பிள்ளை நவரெத்தினம்

[முடமாவடி]

கோண்டாவிலை பிறப்பிடமாகக் கொண்டவரும் நீர்வேலியை வசிப்பிடமாகக் கொண்டவருமான தம்பிப்பிள்ளை நவரெத்தினம் காலமானார்.

அன்னார் சிவனேஸ்வரி, பரமசிவம், அன்னலக்சுமி, சின்னம்மா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று [17 5-91] காலை 10 மணிக்கு தகனக்கிரிகைக்காக கோண்டாவில் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை அறியத்தருகிறோம்

தகவல்:

திருநெல்வேலி கிழக்கு,
சங்கீதா வீதி,
முடமாவடி.

மதியாபரணம்
[கண்ணன்]

[16726]

## கி. ஞானப்பிரகாசம்

தம்பளையை பிறப்பிடமாகவும் கரவெட்டி வேணியடியை வசிப்பிடமாகவும் கொண்ட கி. ஞானப்பிரகாசம் [இளைப்பாறிய தபால் அலுவலர்] 15-05 91 நேற்றுக் காலமானார்.

அன்னார் மரியமுத்துவின் அன்புக் கணவரும், பிரேமதாஸ் [கனடா], தேவதாஸ் [விஜயசுந்தரா அன் கோ கொழும்பு] ஆகியோரின் அன்புத்தந்தையும், கி. மனுவேற்பிள்ளை [இளைப்பாறிய அதிபர்], மேரி மாகிறேற், கிளாரம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், பற்றீஷியா [கனடா], அனோஜா ஆகியோரின் அன்பு மாமனாரும், டொனால்டினின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக கரவெட்டி சேமக்காலைக்கு இன்று [17-05-91] காலை 10 மணிக்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்;

தகவல்:

[16727] மனைவி, பிள்ளைகள்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 17-05-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org